# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.138 of 2017
Prosecution Witness No.P.W.45 (L.W.37)

| | | | |
|---|---|---|---|
| Name | தீபக் குமார் | Caste | MBC(வன்னியர்) |
| Father's Name | G.பாரதி | Calling | BA. |
| Village | விரிஞ்சிபுரம் | Religion | Hindu |
| Taluk | அணைக்கட்டு | Age | 32 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 27.02.2025.

(A1 to A6 present)

**முதல் விசாரணை தொடங்கிய நேரம் மதியம் 02.06 P.M.**

நான் தற்போது திருவள்ளூர் மாவட்டம் ஆவடி காவல் ஆணையகத்தில் பி4 செவ்வாய்ப்பேட்டை காவல் நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் 1 முதல் 6 வரை தெரியும் என்று சாட்சி எதிரிகளை பார்த்து அடையாளம் காட்டுகிறார்.

கடந்த 13.02.2014 அன்று காவல் நிலைய பணிக்கு தேர்வாகி 13.03.2014 அன்று பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் இளைஞர் காவல் படையில் அறிக்கை செய்கிறேன். அன்று காவல் ஆய்வாளராக திரு. மார்டின் பிரேம்ராஜ் இருந்தார். எனக்கு தபால் டியூட்டி மற்றும் பந்தோபஸ்து டியூட்டி ஆகியவை இருந்தன. கடந்த 15.06.2015 அன்று கழணிப்பாக்கம் கண்ணன் கொல்லை கோவில் பந்தோபஸ்து டியூட்டி எனக்கு போடப்பட்டது.

நிலைய எழுத்தர் முத்துக்குமரன் இருக்கும்போது பந்தோபஸ்தில் இருந்தேன். பந்தோபஸ்து பணி முடிந்து தபால் பெற்றுக்கொண்டு 16.06.2015 அன்று காலை வேலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் தபாலை ஒப்படைத்தேன்.

அன்று மதியம் சுமார் 02.00 மணியளவில் பள்ளிக்கொண்டா காவல் நிலையம் வந்தேன். வந்தபோது ஒருவரை உட்கார வைத்திருந்தார்கள். அவர் யார் என்று நிலைய எழுத்தர் முத்துக்குமரினிடம் கேட்டபோது பவித்ரா மிஸ்ஸிங் வழக்கு தொடர்பாக அவரை விசாரிக்க கொண்டு வந்ததாக சொன்னார். அவர் பெயர் ஷமீல் பாஷா என்று சொன்னார்.

அ.த.சா.ஆ.13 ஒளிநகல் ஆவணத்தில் உள்ள படத்தில் உள்ளவர் ஷமீல் பாஷா ஆவார். அன்று இரவு 07.30 மணிக்கு பணி முடித்து ஓய்வில் சென்றுவிட்டேன். 17.06.2015 அன்று காலை சுமார் 08.30 மணியளவல் பள்ளிக்கொண்டா காவல் நிலையம் வந்தேன். நிலைய எழுத்தர் முத்துக்குமரன் பள்ளிக்கொண்டா ரங்கனாதர் கோவில் பின்புறம் பொலேரா வாகனம் ஒன்று இருக்கிறது அங்கு சீனிவாசன், நந்தக்குமார் ஆகிய இருவர் உள்ளனர் ஆய்வாளர் அங்கு சென்றிருக்கிறார் நீங்களும் அங்கு செல்லுமாறு கூறினார்.

அப்போது காவல் நிலையத்தில் ஷமீல் பாஷா இருந்தார். நான் இருசக்கர வாகனத்தில் ரங்கநாதர் கோவில் பின்புறம் உள்ள ஆற்றுக்கு சென்றேன். ஆய்வாளர் விசாரித்தார். அவர் பெயர் நினைவில்லை. அப்போது பிரிகேடர் சிவாநந்தம் தலைமை காவலர் மற்றும் இளைஞர் காவல் படை சதீஷ்குமாரும் இருந்தார்கள்.

ஆய்வாளர் பொலேரியா வாகனத்தை சீனிவாசனை ஓட்டும்படி சொல்லி அங்கு இருந்த ஒரு நபரை ஏற்றிக்கொண்டு நானும் சதீஷ்குமாரும் அந்த பொலேரியா வாகனத்தில் ஏறிக்கொண்டு பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்கு வந்தோம். ஆய்வாளர் பின்னர் அவரை விசாரித்துவிட்டு ஆம்பூர் பந்தோபஸ்து பணிக்கு சென்றுவிட்டார்.

பந்தோபஸ்து பணி முடிந்து சுமார் மாலை 03.00 மணியளவில் காவல் ஆய்வாளர் காவல் நிலையத்திற்கு அவருடைய வாகனத்தில் வந்தார். மணிகண்டன் என்பவர் அந்த வாகனத்தை ஓட்டி வந்தார். சுமார் மாலை 04.00 மணியளவில் காவல் ஆய்வாளர் வாகனத்தில் ஷமீல் பாஷாவை ஏற்றிக்கொண்டு காவல் ஆய்வாளர் அவருடைய சிறப்பு படை திரு. சபாரத்தினம், தலைமை காவலர் நாகராஜ், தலைமை காவலர் ஐயப்பன், காவலர் முரளி ஆகியோர்கள் மணிகண்டன் வாகனத்தை ஓட்ட எங்கேயோ சென்றார்கள்.

அப்போது காவல் நிலையத்தில் நிலைய எழுத்தர் முத்துக்குமரன் மற்றும் சிசிடி நர்ஸ் கங்காபாய், சர்சில் ரேடர் தெய்வாணை ஆகியோர் இருந்தனர். மாலை சுமார் 06.00 மணியளவில் ஒட்டுநர் மணிகண்டன் என்பவர் பள்ளிக்கொண்டா காவல் நிலையம் வந்தார். அவருக்கு வயிற்றுப்போக்கு ஏற்பட்டதால் வந்ததாக சொன்னார். அவ்வாறு கூறிவிட்டு அவர் சென்றுவிட்டார். எங்கிருந்து வருகிறாய் என்று மணிகண்டனிடம் கேட்டபோது குடியிருப்பிலிருந்து வந்ததாக கூறினார். பின்பு அவர் கழிவறைக்கு சென்றுவிட்டார்.

இரவு 07.00 மணிக்கு பணியை முடித்துவிட்டு நான் ஓய்வில் சென்றுவிட்டேன்.

தலைமை எழுத்தர் முத்துக்குமரன், எஸ்எஸ்ஐ ரவி, சிசி நர்ஸ் கங்காபாய் மற்றும் பொலேரியா வாகனத்தில் வந்த மூன்றாம் நபர் காவல் நிலையத்தில் இருந்தனர். 18.06.2015 அன்று காலை 09.30 மணியளவில் பள்ளிக்கொண்டா காவல் நிலையம் வந்தேன். அப்போது நிலைய எழுத்தர் முத்துக்குமரன் இருந்தார். அப்போது வேறு நபர்கள் யாரும் இல்லை.

தபால் பணிக்கு நியமித்து தபாலை பெற்றுக்கொண்டு வேலூர் டிபிஓ சென்று மாலை 03.00 மணியளவில் காவல் நிலையம் வந்தேன். இரவு 07.00 மணிக்கு ஓய்வில் சென்றுவிட்டேன். அப்போது ஸ்பார்ட் பைன் மேமோ என்னிடம் கொடுத்தார்கள் மறுநாள் காலையில் டிபிஓ அலுவலத்தில் அதை கட்டிவிட்டு மதியம் 03.00 மணிக்கு பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்கு வந்தேன்.

நிலைய எழுத்தர் முத்துக்குமரனிடம் ஷமீல் பாஷாவை பற்றி நான் கேட்டபோது அவரை எழுதிக்கொடுத்துவிட்டு வீட்டிற்கு அழைத்துச்சென்றுவிட்டார்கள் என்று சொன்னார். அன்று இரவு 07.30 மணிக்கு பணியை முடித்து ஓய்வில் சென்றுவிட்டேன்.

19.06.2015 மாலை 03.00 மணிக்கு நான் காவல் நிலையம் வந்தபோது காவல் ஆய்வாளர் திரு. மார்டின் பிரேம்ராஜ் இருந்தார். 26.06.2015 அன்று நிலைய எழுத்தர் திரு. முத்துக்குமரன் மூலம் தொலைபேசியில் ஷமீல் பாஷா இறந்துவிட்டார் என்று எனக்கு தகவல் சொன்னார். ஒருவரை அழைத்துச்சென்றபோது ஆஜர் எதிரிகளில் 1 முதல் 5 எதிரிகள் உடன் இருந்தனர். என்னை சிபிசிஐடி போலீசார் விசாரித்தனர்.

**1ம் எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

ஜூன், 2015 காலக்கட்டத்தில பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் நான் தற்காலிக ஊழியராக பணியாற்றினேன். என்னுடைய நியமன பணியில் என்ன பணி எனக்கு கொடுத்தார்கள் என்றால் தபால் பணி, ஓட்டுநர் பணி, பந்தோபஸ்து பணி ஆகியவற்றை கொடுத்தார்கள்.

பயிற்சியின்போது காவல் நிலையத்தில் என்னென்ன பணி இருக்கும் என்று சொல்லிக்கொடுத்தார்களா என்றால் இல்லை. காவல் நிலையத்தில் நடக்கின்ற நடைமுறைகளான எந்நெந்த அதிகாரிகள் வருகிறார்கள் யார் யார் புகார் கொடுக்கிறார்கள் என்ற விவரத்தை பொது நாட்குறிப்பேட்டில் குறிக்க வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியும்.

16.06.2015 அன்று எனக்கு அலுவலகத்தை விட்டு வெளியில் வேலைக்கு அனுப்புவதை பொது நாட்குறிப்பேட்டில் எழுதியிருக்கிறார்களா என்றால் பொது நாட்குறிப்பேட்டை எழுதுபவர் எழுத வேண்டும் அதை நான் பார்க்கவில்லை.

எனக்கு எந்த மாதிரி பணி கொடுத்தார்கள் என்பதை அந்த பதிவேட்டில் எழுத வேண்டும் என்று எனக்கு தெரியும். என்னுடைய கு.வி.மு.ச.பிரிவு 161 வாக்குமூலத்தில் நிலைய எழுத்தர் முத்துக்குமரன் என்று பெயர் குறிப்பிடவில்லை, எழுத்தரிடம் என்று உள்ளது.

இளைஞர் காவல் படையில் என்னுடன் சேர்ந்து மொத்தம் நான்கு பேர் இருந்தோம். எங்கள் நால்வருக்கும் டியூட்டி ரோஸ்டரிலேயே அந்தந்த பணிகளை ஒதுக்கீடு செய்வார்கள். சிபிசிஐடி போலீசார் என்னை விசாரித்தபோது நான் சொன்னதை கம்பியூடரில் டைப் செய்தார்கள்.

காவல் நிலையத்தில் யார் உட்கார்ந்திருக்கிறார்கள், யார் வந்தார்கள், யார் சென்றார்கள் என்று விசாரிக்கக்கூடிய வேலை என்னுடையது அல்ல. 16.06.2015 அன்று காவல் நிலைய பொறுப்பு யாருக்கு என்றால் எஸ்எஸ்ஐ திரு. ரவி ஆவார்.

16.06.2015 அன்று மாலை நான் ஓய்வில் சென்றேன் என்று சொல்லியுள்ளேன். நான் ஓய்வில் சென்றபோது அன்றைய தினம் நிலைய பொறுப்பு யாருடையது என்றால் பொது நாட்குறிப்பேட்டை பராமரிப்பவரின் பொறுப்பு. 1–ம் எதிரியை தவிற மற்ற 2 முதல் 6 எதிரிகள் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தை சேர்ந்தவர்கள் அல்ல.

1 முதல் 6 எதிரிகள் 16.06.2015–க்கு முன்பிருந்து சிறப்பு பிரிவில் பணியாற்றினார்கள் என்றால் எனக்கு தெரியும். சிறப்பு பிரிவு அமைப்பது உயர் அதிகாரிகள் உத்தரவுக்கு இணங்கி என்றால் சரிதான். உயர் அதிகாரிகளின் உத்தரவின் கீழ்தான் சிறப்பு பிரிவில் பணியாற்ற வேண்டும் என்றால் சரிதான். 1 முதல் 6 எதிரிகளை உயர் அதிகாரிகள் சிறப்பு பிரிவில் பணியாற்ற எழுத்து மூலமான மெமோவோ அல்லது உத்தரவோ இருக்கும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

1 முதல் 6 எதிரிகளை டிஎஸ்பி, எஸ்பி, டிஐஜி ஆகியோர் கலந்து பேசி மூன்று மாநிலங்கள் தொடர்புடைய ஒரு கடத்தல் வழக்கு தொடர்பான பல்வேறு காவல் நிலையங்களிலிருந்து ஆட்களை தேர்ந்தெடுத்து ஒரு குழு அமைத்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

17.06.2015 அன்று காலை 08.30 மணிக்கு நான் காவல் நிலையம் வந்த பிறகு இந்த வழக்கு தொடர்புடைய பொலேரியா வாகனம் சம்பந்தமாக சீனிவாசன் மற்றும் நந்தகுமார் ஆகியோர்

ரங்கனாதர் கோவிலுக்கு பின்பு இருந்த ஆற்றுக்கு சென்றிருந்தார்கள் என்றால் சந்தேகத்தின் அடிப்படையில் அங்கு சென்றார்கள். உயர் அதிகாரிகளின் ஆணைப்படிதான் இந்த காவல் ஆய்வாளர் அங்கு வந்தார் என்பது பற்றி எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

17.06.2015 அன்று காவல் நிலைய வளாகத்திற்குள்ளே பல பேர் பொதுமக்கள் இருந்தார்கள் என்றும் அவர்கள் பெயர் எனக்கு தெரியாது என்றும் போலீசார் சொல்லிக்கொடுத்து ஷமீல் பாஷாவின் பெயரை மட்டும் சொல்கிறேன் என்றால் சரியல்ல. காவல் நிலையத்திற்குள் ஷமீல் பாஷா என்ற நபரும் ஆற்றங்கரையில் இருந்து கொண்டு வந்த நபரும் ஆகிய இருவரும் இருந்தார்கள்.

நான் இருசக்கர வானத்தில் பொலேரியா வாகனம் இருந்த இடத்திற்கு செல்வதற்கு பெட்ரோல் என்னுடைய பணத்தில் போட்டேன். என்னுடைய கு.வி.மு.ச.பிரிவு 161 வாக்குமூலத்தை எத்தனை பக்கங்களுக்கு தட்டச்சு செய்தார்கள் என்றால் இரண்டு தாள்கள் கொடுத்தார்கள் ஒரு தாள் இரண்டு பக்கமும் இருந்தது, மற்றொரு தாளில் ஒரு பக்கத்தில் தட்டச்சு செய்யப்பட்டிருந்தது. என்னிடம் அதை கொடுத்து படிக்கச்சொன்னார்கள். நான் சொன்னதை டைப் செய்தார்கள். டைப் செய்ததை எடுத்து என்னிடம் கொடுத்தார்கள். அதில் நான் கையொப்பம் போட்டேன்.

ஒரு ஆய்வாளர் சிறப்பு பணியில் பணியாற்றும்போது வேறு ஒரு வழக்கை விசாரிக்க முடியுமா என்றால் அதைப்பற்றி தெரியாது. சிறப்பு பணியில் இருந்த எதிரிகள் எந்தெந்த காவல் நிலையத்திலிருந்து வந்தார்கள் என்று எனக்கு தெரியாது.

அந்த சிறப்பு பணியில் இருந்தவர்கள் அனைவரையும் 16.06.2015–க்கு முன்பு எனக்கு தெரியுமா என்றால் தெரியும் அவர்கள் காவல் நிலையத்திற்கு வந்துள்ளார்கள். எத்தனை முறை அதற்கு முன்பு வந்தார்கள் என்றால் நிறைய முறை வந்துள்ளார்கள். அப்படி பல முறை அவர்கள் காவல் நிலையம் வந்திருந்தால் அதைப்பற்றி பொது நாட்குறிப்பில் எழுதியிருப்பார்களா அல்லது எழுதாமல் இருந்திருப்பார்களா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. பொது நாட்குறிப்பேட்டை எழுதியவருக்குதான் தெரியும்.

காவல் நிலைய பொது நாட்குறிப்பில் சிறப்பு பணியில் இருந்த நபர்கள் வந்ததை பற்றி எந்த குறிப்பும் இல்லை என்றும் சிபிசிஜடி போலீசார் சொல்லிக்கொடுத்து பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் சிறப்பு பணியில் இருந்தவர்கள் பல முறை காவல் நிலையம் வந்ததை சிபிசிஜடி போலிசாரிடம் சொன்னேனா என்றால் அவர்கள் கேட்கவில்லை அதனால் சொல்லவில்லை.

17.06.2015 அன்று மாலை 04.00 மணிக்கு என்னுடைய பணி என்ன என்பது குறித்து ஏதாவது ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனவே 17.06.2015 அன்று ஷமீல் பாஷாவை அந்த சிறப்பு பணி குழுவிலிருந்தவர்கள் எடுத்துச்சென்றார்கள் என்று சிபிசிஜடி போலிசார் சொல்லிக்கொடுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

17.06.2015 அன்று ஷமீல் பாஷா காவல் நிலையத்தில் இருந்தார் என்பதற்கான விவரத்தை காவல் நிலைய பொது நாட்குறிப்பேட்டில் பதிய வேண்டும். ஆனால் அந்த விவரத்தை பொது நாட்குறிப்பேட்டில் பதிந்தார்களா என்று எனக்கு தெரியாது.

விசாரணைக்கு கூட்டி வந்தவர்களை காவல் நிலையத்தை விட்டு வெளியில் அழைத்துச்சென்றால் அந்த விவரத்தையும் பொது நாட்குறிப்பேட்டில் பதிய வேண்டும். 18.06.2015 அன்று காலை 09.30 மணிக்கு என்னுடைய பணி என்ன என்பது குறித்து எந்த ஆவணத்தையும் நான் நீதிமன்றத்தில் கொடுக்கவில்லை.

நான் காவல் நிலையத்தை விட்டு வெளியில் தபாலை எடுத்துக்கொண்டு செல்லும்போது ஏதாவது கையெழுத்து போட்டுவிட்டு வெளியில் செல்வேனா என்றால் ஆமாம். 18.06.2015 அன்று காலை 09.30 மணிக்கு நான் காவல் நிலையத்திற்கு வந்தேன் என்றும் அன்றைக்கு எனக்கு தபால் பணி கொடுத்ததற்கான ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

18.06.2015 அன்று காலை 09.30 மணிக்கு நான் காவல் நிலையத்திற்கு வந்தேன் என்றும் அங்கு யார்யார் இருந்தார்கள் என்று நான் பார்த்தேன் என்றும் அங்க ஷமீல் பாஷா இல்லை என்றும் நான் சிபிசிஐடி போலீசார் சொல்லிக்கொடுத்து சொல்கிறேன் என்றால் சரியல்ல.

என்னுடைய கு.வி.மு.ச.பிரிவு 161 வாக்குமூலத்தில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதில் என்னுடைய கையெழுத்து இல்லை. என்னுடைய கு.வி.மு.ச.பிரிவு 161 வாக்குமூலத்தில் 19.06.2015 என்று எந்த ஒரு குறிப்பும் இல்லை. அரசு தரப்பில் சொல்லிக்கொடுத்து 19.06.2015 என்ற தேதியை சொல்கிறேன் என்றால் சரியல்ல.

சர்க்கில் இன்ஸ்பெக்டர் என்றால் இரண்டுக்கு மேற்பட்ட நிலையங்களுக்கு பொறுப்பானவர். அவ்வாறான சூழ்நிலையில் காவல் நிலைய பொறுப்பு யாருடையது என்றால் ஆய்வாளர்தான் காவல் நிலைய பொறுப்பு.

ஒரு காவல் துறையில் பணியாற்றுபவருக்கு சர்கில் இன்ஸ்பெக்டருக்கும் ஆய்வாளருக்கும் வேறுபாடு தெரியுமா என்றால் தெரியும். பள்ளிக்கொண்டா காவல் நிலையம் சர்க்கில் இன்ஸ்பெக்டருக்கு கீழ் உள்ளபோது அந்த காவல் நிலையத்திற்கு மூத்த காவல் உதவி ஆய்வாளர் அல்லது நேரடியாக நியமிக்கப்பட்ட காவல் ஆய்வாளர் தான் பொறுப்பு என்றால் சரிதான்.

பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் யார் வந்தார்கள், யார் சென்றார்கள் என்பதற்கான தொடர்பு எனக்கு இல்லை. என்னுடைய கு.வி.மு.ச.பிரிவு 161 வாக்குமூலத்தில் சொல்லப்படாத சங்கதிகளை தற்போது நீதிமன்றத்தில் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**2 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார்.

**5ம் மற்றும் 6ம் எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார். அனுமதியுடன் தொடர் குறுக்கு விசாரணை.

**மறுவிசாரணை– இல்லை**

**விசாரணை முடிவுற்ற நேரம் மாலை 03.30 மணி**

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.02.27 17:33:16 +0530